**கவனிக்க.-** *08.08.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1824 - 2013 අගෝස්තු මස 16 වැනි සිකුරාදා - 2013.08.16

*1824 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1750 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1751 |
| | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** *இவ்வர்த்தமானியின் பகுதி V இல் அச்சீட்டாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் சட்டத்தின்கீழ் 2011 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (சனவரி-மாச்சு) புத்தகப் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2013, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஓகத்து மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## திஹகொட பிரதேச சபை

அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமொன்றாக அறிவித்தல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் 134 ஆம் சரத்தின் 1 ஆம் உப பிரிவின்படி பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, திஹகொட பிரதேச சபை வலுப்பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் 2008.11.17 ஆந் திகதிய கடிதத்தின் அனுமதியின்படி விளம்பரப்படுத்தப்பட்டதாகவும், இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

நிர்மால் சமரசிங்க,
தலைவர்,
திஹகொட பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
திஹகொட,
2013.06.20.

8-476

---

## பொல்கஹவெல பிரதேச சபை

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க மாகாண நிர்வாக நிறுவனங்கள் (அனுமதிக்கப்பட்ட விதிகள்) பொல்கஹவலை பிரதேச சபை

*(261 ஆம் அதிகாரமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க மாகாண நிர்வாக நிறுவனங்கள் (அனுமதிக்கப்பட்ட இடைநிலை விதிகள்) சட்டத்தில் (3) ஆம் பிரிவினில் (1) ஆம் உபபிரிவினால் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகார நிலையின் படி பொல்கஹவலை பிரதேச சபையினால் 2012.01.30 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தின் போது பின்வரும் தீர்மானங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகின்றது.*

லிவேரா குணதிலக,
தலைவர்,
பொல்கஹவலை பிரதேச சபை.

2013.07.29.

### தீர்மானம்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (அ) பந்தியோடு வாசிக்க வேண்டிய (261 ஆம் அதிகாரமாகிய) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க மாகாண நிர்வாக நிறுவனங்கள் (அனுமதிக்கப்பட்ட இடைநிலை விதிகள்) சட்டத்தில் (2) ஆம் பிரிவினில் (1) ஆம் உபபிரவின் கீழ் வடமேல் மாகாணத்தில் மாகாணச் சபையில் மாகாண நிர்வாக பொறுப்புள்ள அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகார நிலையின்படி வடமேல் மாகாணத்து மாகாண நிர்வாகப் பொறுப்புடைய அமைச்சரால் அமைக்கப்பட்டு 2010.07.16 ஆந் திகதி இலக்கம் 1663 உடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் (IV) (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட வடமேல் மாகாணத்தின் சபையினால் ஆமோதிக்கப்பட்ட 2011.04.28 ஆந் திகதி இலக்கம் 1703/18 உடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் (IV) (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலால் கூறப்பட்டுள்ளதானதும் பிரதேச சபைகளுக்கு விருப்ப மற்ற, அபாயகரமானதும் விருப்பமற்றதும், அபாயகரமான வியாபார செயல்கள், பிரயாண வியாபாரங்கள், பிரதேச சபை எல்லைக்குள் வாகனங்கள் நிறுத்தி வைத்தல், பிரதேச சபை எல்லைக்குள், நுளம்பு மற்றும் வியாதிகரமான பூச்சிகளை அழித்தல், பிரதேச சபை எல்லைக்குள் தெருக்களும் பாதை ஒழுங்குகளும் அலங்கரித்தல், தங்கும் வீடுகளும் வாடகை வீடுகளும் சம்பந்தமான அனுமதிக்கப்பட்ட இடைநிலை விதிகள் இப்பிரேரணை வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதியில் இருந்து செயல்படுவதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும் மேலே குறிப்பிடப்பட்ட மாகாண நிர்வாக நிறுவனங்கள் (அனுமதிக்கப்பட்ட இடைநிலை விதிகள்) 3 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் கீழ் பொல்கஹவலை பிரதேச சபை தீர்மானம் செய்கிறது.*

8-604

---

## கட்டானை பிரதேச சபை

மாடறுப்பு கட்டளைச் சட்டம் (272 ஆம் அத்தியாயம்)

*இங்கு கீழே அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் அதில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் 2013 ஆம் ஆண்டில் மாடறுக்கும் இடங்களை நடாத்துவதற்கும் மற்றும் மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி, ஆட்டிறைச்சி வியாபாரம் செய்வதற்கும் அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு முன் வந்திருக்கிறார்கள் என மாடறுப்பு கட்டளைச் சட்டத்தின் (272 ஆம் அத்தியாயம்) 7 (2) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இந்த அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல் சம்பந்தமாக கட்டானை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வதியும் யாராகிலும் எதிர்ப்புத் தெரிவிப்பார்களாயின் அவர் எதிர்ப்புத் தெரிவிப்பது எந்தக் காரணத்திற்காக என்பதனைக் குறிப்பிட்டு கடிதமொன்றை இரண்டு பிரதிகளைக் கொண்டதாக இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி தொடக்கம் 14 நாட்களுக்குள் எனக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என இத்தால் அறியத்தருகின்றேன்.*

பீ. லீலானந்த சில்வா,
தவிசாளர்,
கட்டானை பிரதேச சபை.

கட்டானை,
பிரதேச சபை அலுவலகம்,
2013, யூலை 31.

**அட்டவணை**

| | விண்ணப்பதாரரின் பெயரும் முகவரியும் | இடம் | வியாபாரம்/தொழில் முயற்சி |
|---|---|---|---|
| 01. | திரு. டபிள்யூ. ஆர். பெரேரா 545/2, லியோ மாவத்தை, கோங்கொடமுள்ள, கட்டான | எஸ். தனுஜ பெர்னாந்து என்பவருக்குச் சொந்தமான இல. 04, கிம்புலபிட்டடிய வீதி, கல்மங்கட, நீர்கொழும்பு முகவரியில் உள்ள இடம் | பன்றி இறைச்சி |
| 02. | திரு. ஆர். எம். ஜே. ஆர். பொன்சேகா, 545/ ஏ, லியோ மாவத்தை, கோங்கொடமுள்ள, கட்டான. | திரு. ஆர். எம். ஜே. ஆர். பொன்சேகா, கட்டுவாபிட்டிய பள்ளிக்கு எதிரில் உள்ள பாதை, மதிப்பீட்டு இல. 05 கொண்ட இடம் | மாட்டிறைச்சி/பன்றி இறைச்சி/ஆட்டிறைச்சி |

8-637

---

# கேள்விப் பத்திர அறிவித்தல்கள்

## ஹட்டன்-டிக்கோயா நகர சபை

டிக்கோயா எம். ஏ. எஸ். அபுசாலி நகர மண்டபத்தினை குத்தகை அடிப்படையில் வழங்குதல்

ஹட்டன் டிக்கோயா நகர சபைக்கு சொந்தமான டிக்கோயா எம். ஏ. எஸ். அபுசாலி நகர மண்டபத்தினை மூன்று வருட காலத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்க 27.06.2013 ஆந் திகதி நடைபெற்ற சபைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்காக முத்திரையிடப்பட்ட கேள்விகள் 28.08.2013 ஆந் திகதி மு. ப. 9.30 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| 2. கேள்வி விண்ணப்பம் | : 28.08.2013 ஆந் திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பதாக விண்ணப்பப்படிவ கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு கட்டணத்தை சபை அலுவலகத்தில் செலுத்தி விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளலாம். |
| 3. கேள்வி விண்ணப்பப்படிவ கட்டணம் | : ரூபா 5,000.00 + வட் மற்றும் NBT வரி |
| 4. மீள செலுத்தப்படும் டென்டர் வைப்புப் பணம் | : ரூபா 100,000.00 |
| 5. மாதாந்த வாடகை தொகை | : ரூ. 75,000.00 க்கு கூடிய தொகையினை குறிப்பிடுபவர்களின் வேண்டுகோள் பரிசீலிக்கப்படும். குறிப்பிடப்படும் தொகைக்கு வட் வரி மற்றும் NBT வரி செலுத்தப்படல் வேண்டும். |
| 6. மீள் செலுத்தப்படும் உடன்படிக்கை வைப்புப் பணம் | : ரூ. 500,000.00 |
| 7. மண்டபத்தினை பார்வையிடல் | : வார நாட்களில் அலுவலக நேரங்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணி வரை பார்வையிட முடியும். |
| 8. குத்தகை காலம் | : மூன்று வருடம் |
| 9. கேள்விகள் திறத்தல் | : 29.08.2013 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு நகர சபை கூட்ட மண்டபத்தில் கேள்விகள் திறக்கப்படும். |

10. சகல கேள்வி பத்திரங்களையும் மூலப் பிரதி, இணை பிரதி என்று இரண்டு பிரதிகளாக அனுப்பி வைக்க வேண்டும். கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "டிக்கோயா எம். ஏ. எஸ். அபுசாலி நகர மண்டபத்தினை குத்தகை அடிப்படையில் வழங்குதல்" என குறிப்பிட்டு தலைவர், ஹட்டன்-டிக்கோயா நகர சபை, ஹட்டன் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைப்பதன் மூலம் அல்லது இச்சபையின் கேள்வி மனு பெட்டியில் இடுவதன் மூலம் சமர்ப்பிக்க முடியும்.

11. டென்டர் குழுவின் தீர்மானம் இறுதி தீர்மானம் ஆகும்.

12. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரரினால் முழு தொகையினையும் கேள்வி திறக்கப்படும் நேரத்தில் செலுத்துதல் ணேடும். அத்தோடு நகரசபையின் நிபந்தனைகளுக்குட்பட்டு சபையுடன் ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளல் வேண்டும்.

13. மேலதிக விபரங்களை சபையின் தலைவர்/செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். 051-2222275/051-2222276.

அழகமுத்து நந்தகுமார்,
தலைவர்,
ஹட்டன்-டிக்கோயா நகர சபை.

நகர சபை அலுவலகம்,
ஹட்டன்-டிக்கோயா,
2013.07.25.

8-602/1

## ஹட்டன்-டிக்கோயா நகர சபை

ஹட்டன் பஸ் தரிப்பு நிலைய நட்சத்திர சதுக்கத்தில் அமைந்துள்ள இல. 04ஏ கடையறையினை குத்தகை அடிப்படையில் வழங்குதல்

ஹட்டன்-டிக்கோயா நகர சபைக்கு சொந்தமான ஹட்டன் பஸ்தரிப்பு நிலைய நட்சத்திர சதுக்கத்தில் அமைந்துள்ள இல. 04ஏ கடையறையினை குத்தகை அடிப்படையில் வழங்க சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்காக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 28.08.2013 ஆந் திகதி மு. ப. 9.30 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| 2. கேள்வி விண்ணப்பம் | : | 28.08.2013 ஆந் திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பதாக விண்ணப்பப்படிவ கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு கட்டணத்தை சபை அலுவலகத்தில் செலுத்தி விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம். |
| 3. மீள செலுத்தப்படாத கேள்வி விண்ணப்பப்படிவ கட்டணம் | : | ரூபா 5,000.00 + வட் மற்றும் NBT வரி |
| 4. டென்டர் தொகை | : | ரூபா 500,0.000 + வட் மற்றும் NBT வரி<br>கூடிய தொகையினை குறிப்பிடுபவர்களின் வேண்டுகோள் பரிசீலிக்கப்படும். |
| 5. மீள செலுத்தப்படும் டென்டர் வைப்புப் பணம் | : | ரூ. 100,000.00 |
| 6. கடையறையின் அளவு | : | 90 சதுர அடி |
| 7. கடையறையினை பார்வையிடல் | : | வார நாட்களில் அலுவலக நேரங்களில் பார்வையிட முடியும். |
| 8. மாதாந்த வாடகை | : | அரசாங்க விலை மதிப்பீட்டாளரினால் மதிப்பிடப்படும் குத்தகை அறவிடப்படும். |
| 9. குத்தகை காலம் | : | நீண்ட கால அடிப்படையில் குத்தகை வழங்கப்படும். |
| 10. கேள்விகள் திறத்தல் | : | 29.08.2013 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு நகர சபை கூட்ட மண்டபத்தில் கேள்விகள் திறக்கப்படும். |

11. சகல கேள்வி பத்திரங்களையும் மூலப் பிரதி, இணை பிரதி என்று இரண்டு பிரதிகளாக அனுப்பி வைக்க வேண்டும். கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "ஹட்டன் பஸ்தரிப்பு நிலைய நட்சத்திர சதுக்கத்தில் அமைந்துள்ள இல. 04ஏ. கடையறையினை நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்" எனக் குறிப்பிட்டு தலைவர், ஹட்டன்-டிக்கோயா நகர சபை, ஹட்டன் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைப்பதன் மூலம் அல்லது இச்சபையின் கேள்வி மனு பெட்டியில் இடுவதன் மூலம் சமர்ப்பிக்க முடியும்.

12. டென்டர் குழுவின் தீர்மானம் இறுதி தீர்மானம் ஆகும்.

13. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வியாளர் முழு தொகையினையும் கேள்வி திறக்கப்படும் தினத்தில் செலுத்துதல் வேண்டும்.

14. மேலதிக விபரங்களை சபையின் தலைவர்/செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். 051-2222275/051-2222276.

அழகமுத்து நந்தகுமார்,
தலைவர்,
ஹட்டன்-டிக்கோயா நகர சபை.

நகர சபை அலுவலகம்,
ஹட்டன்-டிக்கோயா,
2013.07.25.

8-602/2

**ஹட்டன்-டிக்கோயா நகர சபை**

ஹட்டன் பஸ் தரிப்பு நிலைய நட்சத்திர சதுக்க கடையறையினை குத்தகை அடிப்படையில் வழங்குதல்

ஹட்டன்-டிக்கோயா நகர சபைக்கு சொந்தமான ஹட்டன் பஸ்தரிப்பு நிலைய நட்சத்திர சதுக்கத்தில் அமைந்துள்ள கடையினை குத்தகை அடிப்படையில் வழங்க 27.06.2013 ஆந் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்காக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 28.08.2013 ஆந் திகதி மு. ப. 9.30 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| 2. கேள்வி விண்ணப்பம் | : 28.08.2013 ஆந் திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பதாக விண்ணப்பப்படிவ கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு கட்டணத்தை சபை அலுவலகத்தில் செலுத்தி விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம். |
| 3. மீள செலுத்தப்படாத கேள்வி விண்ணப்பப்படிவ கட்டணம் | : ரூபா 5,000.00 + வட் மற்றும் NBT வரி |
| 4. டென்டர் தொகை | : ரூபா 1,000,000.00 + வட் மற்றும் NBT வரி கூடிய தொகையினை குறிப்பிடுபவர்களின் வேண்டுகோள் பரிசீலிக்கப்படும். |
| 5. மீள செலுத்தப்படும் டென்டர் வைப்புப் பணம் | : ரூ. 200,000.00 |
| 6. கடையறையின் அளவு | : 1324.12 சதுர அடி |
| 7. கடையறையினை பார்வையிடல் | : வார நாட்களில் அலுவலக நேரங்களில் பார்வையிட முடியும். |
| 8. மாதாந்த வாடகை | : அரசாங்க விலை மதிப்பீட்டாளரினால் மதிப்பிடப்படும் குத்தகை அறவிடப்படும். |
| 9. குத்தகை காலம் | : நீண்ட கால அடிப்படையில் குத்தகை வழங்கப்படுவதுடன் 01.09.2013 ஆந் திகதி தொடக்கம் குத்தகை காலம் ஆரம்பமாகும். |

10. கேள்விகள் திறத்தல் : 29.08.2013 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு நகர சபை கூட்ட மண்டபத்தில் கேள்விகள் திறக்கப்படும்.

11. சகல கேள்வி பத்திரங்களையும் மூலப் பிரதி, இணை பிரதி என்று இரண்டு பிரதிகளாக அனுப்பி வைக்க வேண்டும். கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "ஹட்டன் பஸ்தரிப்பு நிலைய நட்சத்திர சதுக்கத்தில் அமைந்துள்ள கடையறையினை நீண்ட கால குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்" என குறிப்பிட்டு தலைவர், ஹட்டன்-டிக்கோயா நகர சபை, ஹட்டன் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைப்பதன் மூலம் அல்லது இச்சபையின் கேள்வி மனு பெட்டியில் இடுவதன் மூலம் சமர்ப்பிக்க முடியும்.

12. கேள்வி பத்திரங்களை முழுமையாகவோ பகுதி அளவிலோ ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் போன்ற அனைத்து அதிகாரமும் ஹட்டன்-டிக்கோயா நகர சபை கேள்வி மனு குழுவுக்கு உள்ளது.

13. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வியாளர் முழு தொகையினையும் கேள்வி திறக்கப்படும் நேரத்தில் செலுத்துதல் ேண்டும்.

மேலதிக விபரங்களை சபையின் தலைவர்/செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். 051-2222275/051-2222276.

அழகமுத்து நந்தகுமார்,
தலைவர்,
ஹட்டன்-டிக்கோயா நகர சபை.

நகர சபை அலுவலகம்,
ஹட்டன்-டிக்கோயா,
2013.07.25.

8-602/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.